# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2197/3 - 2020 ඔක්තෝබර් මස 12 වැනි සඳුදා - 2020.10.12

*2197/3 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தியமைக்கப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், இதனகத்துக்குப் பின்னர், பின்வரும் அட்டவணையின் I ஆம், II ஆம் மற்றும் III ஆம் நிரல்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பொருள் மீதும், அப்பொருட்களுக்கு நேரெதிரே அதே அட்டவணையின் நேரொத்த பதிவுகளில் IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதங்களால், இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதிய 2189/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டவாறான 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதிய 2113/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் I ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பொருள் மீதும், IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதங்கள் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் பதிலீடு செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, ஒற்றோபர் 12.*

**அட்டவணை**

| இ. மு. தலைப்பு<br>I | இ. மு. குறியீடு<br>II | விபரம்<br>III | உற்பத்தி வரி<br>IV |
|---|---|---|---|
| **22.02** | | **நீர், கனிப்பொருள் நீரும் தாதுப்பொருள் நீரும் உட்பட மற்றும் காற்றூட்டப்பட்ட நீர், சீனி அல்லது வேறு இனிப்புப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டவை அல்லது மண மூட்டப்பட்டவையும் பிற மதுசாரப் பானங்களும் தலைப்பு 20.09 இல் கீழுள்ள பழ அல்லது மரக்கறி சாறுகள் கொண்டிராதவை.** | |
| | 2202.10 | நீர், கனிப்பொருள் நீரும் காற்றூட்டப்பட்ட நீரும் உட்பட, சீனி அல்லது வேறு இனிப்புப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டவை அல்லது மணமூட்டப்பட்டவையும் | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 12/- அல்லது குறித்த உற்பத்தியிலுள்ள சீனியின் உள்ளடக்கம் 100 மி. லீ. இற்கு 6 கிராம்களை நீக்கி, கிராம் ஒன்றிற்கு 30 சதம் இவற்றில் எப்பெறுமதி கூடியதோ அப்பெறுமதி |
| | 2202.99 | பிற | |
| | 2202.99.30 | "சக்தியளிக்கும் பானங்கள்" என சில்லறை விற்பனைக்கு விடப்பட்ட குடிபானங்கள் | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 12/- அல்லது குறித்த உற்பத்தியிலுள்ள சீனியின் உள்ளடக்கம் 100 மி. லீ. இற்கு 6 கிராம்களை நீக்கி, கிராம் ஒன்றிற்கு 30 சதம் இவற்றில் எப்பெறுமதி கூடியதோ அப்பெறுமதி |
| | | பழம் அல்லது மரக்கறி சாறினாலான குடிபானங்கள் : | |
| | 2202.99.51 | சீனி உள்ளடக்கம் - 100 மி. லீ. இற்கு 6 கிராம் இற்கு மேற்பட்டவை | உற்பத்தியிலுள்ள சீனியின் உள்ளடக்கம் 100 மி. லீ. இற்கு 8 கிராமினை நீக்கி, கிராம் ஒன்றிற்கு 30 சதம் |
| | | பிற : | |
| | 2202.99.91 | சீனி உள்ளடக்கம் - 100 மி. லீ. இற்கு 6 கிராம் இற்கு மேற்பட்டவை | உற்பத்தியிலுள்ள சீனியின் உள்ளடக்கம் 100 மி. லீ. இற்கு 8 கிராமினை நீக்கி, கிராம் ஒன்றிற்கு 30 சதம் |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.